# அரசாங்க அறிவித்தல்
# மாவட்டச் செயலகம், மன்னார்
# வழங்குனர்களைப் பதிவுசெய்தல் - 2025

மன்னார் மாவட்டச் செயலகம், மற்றும் மன்னார் மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் என்பவற்றிற்கு 2025 ஆம் ஆண்டிற்கு கீழ்க்குறிப்பிடப்படும் பொருட்கள், சேவைகள், வழங்குனர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பதிவு செய்யவிரும்புபவர்கள் விண்ணப்பங்களை மாதிரி படிவத்திற்கு அமைவாக சுயமாகத் தயாரித்தோ அல்லது மன்னார் மாவட்டச் செயலக கொள்ளல் நடைமுறைக்கிளை மற்றும் மன்னார் மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களில் அலுவலக நேரத்திலும், **www.mannar.dist.gov.lk** எனும் இணையத்தளத்தின் மூலமும் பெற்றுக்கொள்ளமுடியும்.

மேலும் விண்ணப்பிக்க விரும்புபவர்கள் கட்டிட நிர்மாண வேலைகளுக்கு கீழே உள்ள கட்டண விபரத்திற்கு ஏற்றவாறும்,

| ஒப்பந்தத் தொகை | பதிவுக்கட்டணம் (மீளளிக்கப்படமாட்டாது) |
|---|---|
| ரூபா 10,000,000 இற்குச் சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்தத் தொகை | ரூபா 2,000.00 |
| ரூபா 10,000,000 இற்கு அதிகமானதும் 25,000,000 இற்குச் சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்தத் தொகை | ரூபா 3,000.00 |
| ரூபா 25,000,000 இற்கு அதிகமான ஒப்பந்தத் தொகை | ரூபா 5,000.00 |

ஏனைய வழங்குனர்கள் வகுதி ஒன்றிற்கு (G1 – S20) தலா ரூபா 500.00 இனையும் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக"**மாவட்ட செயலாளர்,**" **மாவட்ட செயலகம், மன்னார்** என்னும் பெயரில் உள்ள **இலங்கை வங்கி கணக்கிலக்கம் 7041952** ற்கு பணமாக வைப்பிலிடலாம் அல்லது நேரடியாக மாவட்ட செயலக கணக்குக்கிளையில் ( சிறாப்பர் ) செலுத்தலாம். வைப்பிலிட்ட பணத்திற்கான வங்கி வைப்புசிட்டை (உண்மைப் பிரதி) / சிறாப்பரிடம் பெற்றுக்கொண்ட பற்றுச்சிட்டையின் உண்மைப்பிரதி (பொது 172) விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். அவ்வாறு இணைத்து அனுப்பாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்

| 1. Supply Items (G) | |
|---|---|
| G.1. காகிதாதிகள் மற்றும் எழுதுபொருட்கள் | G.09. துணிவகைகள் மற்றும் திரைச்சீலைகள் |
| G.2. அலுவலக உபகரணங்கள் | G.10. விளையாட்டு உபகணரங்கள் |
| G.3. அலுவலக தளபாடங்களும் உபகரணங்களும் (மரம், உருக்கு, பிளாஸ்திக்) | G. 11. பொறிகள் மற்றும் இயந்திரங்கள் |
| G.4. பொது உபகரணங்களும் வீட்டுப்பாவனைப் பொருட்களும் | G. 12. உணவுப் பொருட்கள் /சமைத்த உணவு / சிற்றுண்டிகள்/ குளிர்பானங்கள் |
| G.5. இலத்திரனியல் மற்றும் மின்சார உபகரணங்கள் | G.13. வளர்ப்பு விலங்குகள் / பறவைகள் |
| G.6. அனைத்து வகையான கட்டடப் பொருட்கள் | G. 14. பாதுகாப்பு / கட்டுப்பாட்டு உபகரணங்கள் |
| G.7. மோட்டார் வாகனங்களும் உதிரிப்பாகங்களும் வாகனங்களுக்கான பற்றறிகள் / ரயர்கள் | G.15. மீன்பிடி உபகரணங்கள் |
| G.8. விவசாய உள்ளீடுகளும் / உபகரணங்களும் | G. 16. இசைக் கருவிகள் |

| 2.Service and Repairs (S) | |
|---|---|
| S.1. அலுவலக இயந்திர உபகரணங்களை திருத்தம் செய்தல் | S.11. சுத்திகரிப்பு சேவை வழங்கல் |
| S.2. அலுவலக தளபாடங்கள் திருத்தம் செய்தல் | S.12. கட்டடக் கலைஞர் சேவை |
| S.3. மோட்டார் வாகனங்கள் பழுதுபார்த்தல் | S.13. நீர்க்குழாய் பொருத்தல், பராமரித்தல் மற்றும் திருத்த வேலைகள் |
| S.4. மோட்டார் வாகன சுத்திகரிப்பு வேலைகள் மற்றும் சில்லு ஒழுங்கு சீர்செய்தல் (Wheel Alignment) | S.14. உணவு பரிமாறும் சேவைகள் |
| S.5. மின் இணைப்பு வேலைகளும் / பழுதுபார்த்தலும் | S.15. கட்டட திருத்த மற்றும் மேம்படுத்தல் வேலைகள் |
| S.6. வாடகை வாகன மற்றும் போக்குவரத்து சேவைகள் | S.16. குளிரூட்டிகள், வளி பதனமாக்கிகள் (A/C) திருத்தல், பராமரித்தல் மற்றும் சுத்திகரிப்பு செய்தல் |
| S.7 வாடகை அடிப்படையில் தற்காலிக கொட்டகை, மேடை, கதிரை, மேசை மற்றும் அலங்கார சேவைகளை வழங்கல் | S.17. பொறிகள், இயந்திர உபகரணங்கள் திருத்தல், பராமரித்தல் மற்றும் சுத்திகரிப்பு செய்தல் |
| S.8. அச்சிடுதல் (Offset & Digital) | S.18. அனைத்து வகையான வெல்டிங் மற்றும் அலுமினிய வேலைகள் |
| S.9. வாடகை மற்றும் குத்தகை அடிப்படையில் இலத்திரனியல், இயந்திர உபகரணங்கள் மற்றும் ஒலிபெருக்கி சேவைகளை பெற்றுகொள்ளல் | S.19. தங்குமிட வசதிகள் |
| S.10. பாதுகாப்பு சேவை வழங்கல் | S.20. உள்ளக தொலைபேசி மற்றும் தொலைபேசி திருத்தல், பராமரித்தல் மற்றும் சுத்திகரிப்பு செய்தல் |

| 3. Construction Works (ICTAD/CIDA Registered Members Only) | |
|---|---|
| 1. கட்டட நிர்மாண மற்றும் திருத்த வேலைகள் | 5. பாலங்கள் மற்றும் மதகுகள் நிர்மாண வேலைகள் |
| 2. பெருந்தெருக்கள், வீதிகள் நிர்மாண மற்றும் திருத்த வேலைகள் | 6. கடல்சார் கட்டுமானம் |
| 3. குளங்கள், கால்வாய்கள் மற்றும் விவசாய கிணறுகள் நிர்மாண திருத்த வேலைகள் | 7. அகழ்வாராய்ச்சி மற்றும் மீட்பு |
| 4. நீர்வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றல் நிர்மாண வேலைகள் | 8. புயல் நீர் வெளியேற்றம் மற்றும் நில வடிகால் அமைப்பு |

## பொதுவான நிபந்தனைகள்

வழங்குனர்களைப் பதிவுசெய்தலுக்குரிய பொதுவான நிபந்தனைகள்

1) விண்ணப்பப் படிவத்துடன் பின்வரும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

   i. வியாபார பதிவு உரிமை கட்டணத்தின் (Trade Tax) உறுதிப்படுத்தப்பட்டபிரதி (உள்ளூராட்சி நிறுவனங்களால் வழங்கப்படும் சான்றிதழ் - 2024 ஆம் ஆண்டு)

   ii. நிறுவனப் பெயர்ப் பதிவுச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி (BR/Company Registration)

   iii. உணவு வழங்கல் சேவையாயின் குறித்த பகுதிக்குரிய PHI / MOH அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட சான்றிதழின் பிரதி

   iv. சம்பந்தப்பட்ட வியாபார அனுபவம் மற்றும் பிரதான வாடிக்கையாளர்களின் விபரம்.

வழங்குநர்களாக பதிவுசெய்தலானது 2025ம் ஆண்டிற்கு மட்டுமே செல்லுபடியானதாகும். பொதுவாக பதிவுசெய்யப்பட்ட வழங்குனர்கள் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைமனுகோரப்படும். எனினும் விசேட சந்தர்ப்பங்கள் மற்றும் ஒருவர் மட்டுமே வழங்குனராக பதிவு செய்யப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களில் திறந்த கேள்வி முறைமூலம் ஏனையவர்களிடமும் விலைமனுகோரும் உரிமை கொள்வனவுதாரருக்கு உண்டு.

2) விண்ணப்பங்களை பதிவு செய்தலானது முறையான தரப்படுத்தலுக்கும் மதிப்பீட்டுக்கும் உட்படுத்தப்பட்டே மேற்கொள்ளப்படும். பிழையான விபரங்கள் வழங்கப்பட்டிருப்பின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

3) பதிவுக்காக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் அடிப்படை தகுதிகளை கொண்டிராத சந்தர்ப்பத்தில் எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் நிராகரிப்பதற்கான உரிமையை மாவட்ட செயலாளர் கொண்டுள்ளார்.

4) மனுக்கள் கோரும் போது சரியான விலை மனுக்கள் சமர்ப்பிக்காத அல்லது கோரப்பட்ட பொருட்களை உரிய காலத்தினுள்ளும் மாதிரிக்கு அமைவாகவும் வழங்காத பதிவு செய்த வழங்குனர்களின் பெயர்கள் எதுவித முன்னறிவித்தலுமின்றி பதிவிலிருந்து நீக்கப்படும்.

5) வியாபாரப் பதிவுச் சான்றிதழில் குறிப்பிடப்பட்ட பொருட்கள், சேவைகளுக்கு மட்டுமே வழங்குனர்கள் பதிவு செய்யப்படுவார்கள்.

6) பதிவு செய்யப்பட்ட சங்கங்கள்/அமைப்புக்கள் ரூபா. 5,000,000.00 (ஐந்து மில்லியன்) க்கு மேற்படாத ஒப்பந்தங்களை பொது சுற்று நிருப இல. 01/2012 ற்கு அமைவாக பெற்றுக்கொள்ள முடியும்.

7) குறிப்பிடப்படும் பொருட்கள், சேவைகளுக்கு வழங்குனர்களாகப் பதிவு செய்பவர்களால் சமர்ப்பிக்கப்படும் விபரங்கள், ஆவணங்களின் உண்மைத்தன்மையானது மாவட்டச் செயலாளரால் நியமிக்கப்படும் குழுவினரால் நேரடியாகச் சென்று பார்வையிடுவதன் மூலமோ, நேர்காணலின் மூலமோ பரீட்சிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்படும். வழங்குனர் குறிப்பிட்ட பொருட்கள், சேவைகளுக்கு வழங்குனர்களாகப் பதிவு செய்வதற்குத் தகுதியற்றவர் எனக் காணப்படுமிடத்து தங்கள் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் வைப்புப் பணமும் மீளளிக்கப்பட மாட்டாது.

8) வாகன பழுதுபார்த்தலுக்கோ வாகனப் பராமரிப்புக்கோ பதிவு செய்யப்படவுள்ள கராஜ்கள், சேவிஸ் நிலையங்கள் என்பன அடிப்படைத் தேவையான வசதிகளைக் கொண்டிருத்தல் அவசியம். (விண்ணப்பத்துடன் அவர்கள் கொண்டுள்ள உபகரணங்களின் விபரங்களும் பயிற்சி பெற்ற வேலையாட்களின் விபரங்களும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.) தேவையேற்படும் போது இயந்திரப் பொறியியலாளர் மூலம் தரத்தினைப் பரிசீலனை செய்வதற்கான முழு அதிகாரம் உண்டு.

9) பதிவுக்கான விண்ணப்பங்கள் யாவும் தரப்பட்ட மாதிரிப் படிவத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு மீளளிக்கப்படாத வைப்புப்பணம் செலுத்திய பற்றுச் சீட்டுடன் **2024 மார்கழி மாதம் 16ம்** திகதி அல்லது அதற்கு முன்பதாக **"மாவட்ட செயலாளர், மாவட்டச் செயலகம், மன்னார்"** எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது அலுவலக வேலை நாட்களில் ((மு.ப.9.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை) நேரடியாகவோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும் விண்ணப்பங்கள் அனுப்பும் போது கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் **"வழங்குனர்களைப் பதிவுசெய்தல் - 2025 எனக் குறிப்பிட்டு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். 2024 மார்கழி மாதம் 16 ம்** திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

10) மேலதிக விபரங்களிற்கு **"பிரதம கணக்காளர், மாவட்டச் செயலகம், மன்னார்"** அவர்களின் அலுவலக தொலைபேசி இல 023-2222214 இற்கு தொடர்புகொள்ளமுடியும்.

**K. கனகேஸ்வரன்**
**மாவட்ட செயலாளர்,**
**மாவட்டச் செயலகம்,**
**மன்னார்.**

க. கனகேஸ்வரன்
மாவட்ட செயலாளர்/ அரசாங்க அதிபர்
மன்னார் மாவட்டம்.